பக்கங்கள்: 08
காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 10 வெள்ளிக்கிழமை 25.12.2020 கதிர் 280

# 55 வயதிலும் ஓய்வு பெறலாம்

தொழிற்சங்கத் தலைவர்கள் நீண்டகாலம் விடுத்த கோரிக்கைக்கு அமையவே தனியார் துறை ஊழியர்களின் ஓய்வூதிய வயதெல்லை 60 வரை அதிகரித்த போதிலும், 55 வயதில் ஓய்வில் செல்ல விரும்பும் ஊழியர் ஒருவர் ஊழியர் சேமலாப, ஊழியர் நம்பிக்கை நிதிய வைப்புக்களை

2



வாசகர்கள், விளம்பரதாரர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் ஆதரவாளர்கள் அனைவருக்கும் காலைக்கதிர் குடும்பத்தின் சார்பாக இனிய நத்தார் தின மற்றும் புதுவருட நல்வாழ்த்துக்கள்

# முற்கூட்டியே வாக்களிக்கும் முறை வரும்!

## அரசு இணக்கமாம்

கொழும்பு,டிசெ.25

அத்தியாவசிய கடமைகளில் ஈடுபடுபவர்கள், மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட நோயாளிகள் மற்றும் வெளிநாடுகளில் வேலை செய்பவர்கள் ஆகியோருக்கு தேர்தல் தினத்துக்கு முன்னரே வாக்களிக்க வசதியளிக்கும் ஒரு முறைமையை அறிமுகப்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

2

# மருதனார்மடம் கொத்தணியில் மற்றொரு வியாபாரிக்குத் தொற்று

யாழ்.மருனார்மடம் சந்தையில் வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்ற – உடுவிலைச் சேர்ந்த – மற்றொருவருக்கு இன்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வர் தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் 124 பேருக்கு இன்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் ஒருவருக்குத் தொற்று

2

# சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி சுனாமி நினைவேந்தல் நடத்த அனுமதி



சுனாமி நினைவேந்தல் நிகழ்வுகளை சுகாதார நடைமுறைகளை பின்பற்றி நடாத்துவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்

ஆழிப்பேரலை சுனாமி இயற்கை அனர்த்தத்தினால் காவு கொள்ளப்பட்டோரின் 16 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு நாளை இடம்பெறவுள்ள நிலையில் தற்போது உள்ள கொரோனா பரவல் அச்ச நிலையைக் கருத்தில் கொண்டு சுகாதார

2

# அமைச்சர்களுக்கும் பொதுமக்களுக்கும் கொரோனாச் சட்டம் வேறுபடுகின்றதா?

## இராதாகிருஷ்ணன எம்.பி. கேள்வி



'ஒரே நாடு – ஒரே சட்டம்' எங்கே?அதனை அமுல்படுத்த அதிகாரிகள் விரும்பவில்லையா? கொரோனா சட்டம் அமைச்சர்களுக்கும் பொதுமக்களுக்கும் வேறுபடுகின்றதா?

– இவ்வாறு நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஒரே நாடு ஒரே சட்டம் என்ற ஜனாதிபதியின் கோட்பாடு வெறும் வார்த்தைகளுக்கு மட்டுமே

2

# ஜனாஸா எரிப்புக்கு எதிராக யாழில் இன்று கவனவீர்ப்பு!

## மக்கள் முன்னணி பங்கேற்பு



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,டிச.25

இலங்கையில் முஸ்லிம் ஜனாஸாக்கள் வல்வந்தமாக எரிக்கப்படுகின்றமையைக் கண்டித்து யாழ்ப்பாணம் முஸ்லிம் மக்களினால் சோனகதெரு ஐந்து சந்திப்

2

# கிளிநொச்சியில் 55 குடும்பங்கள் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டன

கிளிநொச்சி மாவட்டத்தில் மேலும் 55 குடும்பங்கள் வீடுகளில் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

கிளிநொச்சி பாரதிபுரத்தில் லொறிச் சாரதி ஒருவருக்கும் அவரது குடும்பத்தில் இருவருக்கும் கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்தே நேற்று மேலும் 55 குடும்பங்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்த தகவலை வடமாகாண சுகாதார சேவைகள்

2

# வவுனியா வைத்தியசாலையில் நோயாளிக்குக் கொரோனா!

வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த பெரிய உலுக்குளம் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அறுபது வயதுடைய பெண் ஒருவர் காய்ச்சல் காரணமாக கடந்த புதன் கிழமை வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

வைத்தியசாலையின் நோயாளர் விடுதியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று

2

# மீசாலை புத்தூர் சந்தியில் ஒருவர் குத்திப் படுகொலை



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,டிச.25

யாழ்ப்பாணம் மீசாலை புத்தூர் சந்திக்கு அண்மையாக குடும்பஸ்தர் ஒருவர் கத்திக்குத்துக்கு இலக்கான நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தந்தையான

2

# 300 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட அரசியல் கைதி ரகுபதி சர்மாவுக்கும் தொற்று



முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை இலக்கு வைத்து 1999 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் தொடர்பான வழக்கில் கைதுசெய்யப்பட்டு 300 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள அரசியல் கைதியான ரகுபதி சர்மா கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவருடன் கொழும்பு மகசின் சிறையில் தொற்றுக் குள்ளான

2

# நாடு முழுவதும் ஒரு லட்சம் காணி விநியோகம் யாழில் மட்டுமே ஒரு லட்சம் விண்ணப்பங்கள்!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிச.25

நாடு முழுவதும் ஒரு லட்சம் காணி விநியோகம் செய்யும் திட்டத்தில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மட்டும் ஒரு லட்சத்து 2 ஆயிரத்து 500 பேர் அக்காணிகளைப் பெற விண்ணப்பித்துள்ளனர்.

நாடு முழுவதும் காணி விநியோகம் செய்வதற்காக கோரப்பட்ட விண்ணப்பத்தினை ஆராய்ந்து, அவர்களிற்கான நேர்முகத் தேர்வினை நடத்தி, பட்டியலைத் தயார் செய்து முன்னுரிமைப்படுத்துவது தொடர்பாக யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற

2

## 300 ஆண்டு சிறைத் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் கைதிகளின் எண்ணிக்கை 14ஆக அதிகரித்துள்ளது.

அரசியல் கைதிகள் உட்பட பல்வேறு சிறைகளில் உள்ள 65 வரையான தமிழ் கைதிகளுக்கும் இதுவரை கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, தொற்று உறுதியான அரசியல் கைதிகள் அனைவரும் கந்தக்காடு கொரோனாத் தொற்று சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பிவைக்கப்படுகின்றனர் என்று முதலில் தகவல்கள் வெளியாகியிருந்தபோதும் தற்போதுவரை வெலிக்கடை சிறை வைத்தியசாலையிலேயே அவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மகஸின் சிறையில் மட்டும் 44 அரசியல் கைதிகள் உள்ள நிலையில் அவர்கள் அனைவரும் அச்சம் காரணமாக பி.சி.ஆர். பரிசோதனை செய்துகொள்ளப் பின்னடித்து வருகின்றன எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அனைவருக்கும் பரிசோதைனை முன்னெடுக்கப்பட்டால் மேலும் தொற்று நோயாளர் தொகை அதிகரிக்கலாம் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை, தமிழ் அரசியல் கைதிகள் பலர் நீண்ட காலம் சிறையில் உள்ளனர். அத்துடன் இவர்களில் பலா நீண்டகால நோய் நிலைகளுக்கு ஆட்பட்டவர்கள் என்பதால் தொற்று நோயால் இவர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் எனக் குடும்பத்தினர் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

இவ்வாறான சந்தாப்பத்தில் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக அரசியல் கட்சிகள், சிவில் சமூகங்கள் மற்றும் மதத் தலைவாகள் குரல் கொடுக்க வேண்டும் என அரசியல் கைதிகளின் விடுதலைக்காகப்போராடிவரும் குரலற்றவர்களின் குரல் அமைப்பு மற்றும் அரசியல் கைதிகளின் குடும்பத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறைந்தது அவர்களை உடனடியாகப் பிணையிலாவது விடுவித்து அவர்களின் உயிரைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

இது தொடர்பில் குரல் அற்றவர்களின் குரல் அமைப்பினர் மதத் தலைவர்கள் மற்றும் அரசியல் தலைவர்களைச் சந்தித்துப் பேசி வருகின்றனர்.

## நாடு முழுவதும் ஒரு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துரையாடலின்போதே மேற்படி கருத்து தெரிவிக்கப்பட்டது.

இக் கலந்துரையாடலில் பல தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

* அவற்றிற்கு அமைய தற்போது விண்ணப்பித்தவர்களில் ஓர் ஏக்கருக்கும் குறைவாக விண்ணப்பித்தவர்களிற்கும், வதிவிட பிரதேச செயலாளர் பிரிவிற்குள் காணி கோரியவர்களிற்கும் முதலில் நேர்முகத் தேர்வினை நடாத்தி தகுதியானவர்களை இனம் கண்டு பட்டியிடுவதோடு அடுத்த கட்டமாக எஞ்சியவர்களிற்கான நேர்முகத் தேர்வினை நடாத்துதல்.

* காணி கோரி விண்ணப்பித்தவர் வசிக்கும் பிரதேசசெயலாளர் பிரிவிலேயே நேர்முகத் தேர்வினை நடத்துவதன் மூலமே விண்ணப்பதாரிக்கு வேறு நிலம், முயற்சிநிஜமை தொடர்பான விவரங்களை உறுதிப்படுத்த முடியும் என்பதனால் வசிக்கும் பிரதேச செயலகத்திலேயே நேர்முகத் தேர்வினை நடாத்துதல்.

* ஒரே குடும்பத்தில் எத்தனைபேர் விண்ணப்பித்திருப்பினும் முதல் கட்டமாக ஒருவருக்கு மட்டுமே சிபாரிசு செய்தல்.

- போன்ற தீர்மானங்கள் மாவட்டச் செயலாளர் தலைமையில் எட்டப்பட்டுள்ளன.

இக் கலந்துரையாடலில், காணி ஆணையாளர், உள்ளூராட்சி ஆணையாளர், தெங்கு அபிவிருத்திச் சபை எனப் பல திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

நாடு முழுவதும் வருடாந்தம் சராசரியாக இருபதாயிரம் பேருக்கு என்ற அடிப்படையில் அடுத்த ஐந்தாண்டுகளில் ஒரு லட்சம் பேருக்கு இவ்வாறு காணிகள் பிரித்து வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## மீசாலை புத்தூர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐயாத்துரை மோகனதாஸ் (47 வயது) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இன்று முற்பகல் 11 மணியளவில் அவரது வீட்டுக்கு அண்மையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது என்று கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டிலிருந்து மீசாலைக்கு துவிச்சக்கர வண்டியில் புறப்பட்ட அவரை இனந் தெரியாத ஒருவர் வழிமறித்து கையிலும் நெஞ்சுப் பகுதியிலும் கத்தியால் குத்தி விட்டுத் தப்பித்துள்ளார்.

குருதி வெள்ளத்தில் வீதியில் கிடந்த வரை சாவகச்சேரி வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று அனுமதித்த போதும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார் என மருத்துவரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. சடலம் சாவகச்சேரி வைத்தியசாலையில் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

## வவுனியா வைத்தி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்ததுடன் நெஞ்சு வலி காரணமாக அவசர சிகிச்சை பிரிவிலும் சிகிச்சை பெற்றுள்ளார்.

இந்நிலையில் குறித்த பெண்ணுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் முடிவு இன்று மாலை வெளியாகிய நிலையில் குறித்த பெண்ணுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த பெண் சிகிச்சை பெற்ற பகுதி மற்றும் சிகிச்சையளித்த வைத்தியர்கள், தாதியர்களை தனிமைப் படுத்தவும் சுகாதார பிரிவினர் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். (உ - 100)

## கிளிநொச்சியில் 55 ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

சாரதியின் குடும்பத்துடன் நேரடித் தொடர்புகளை வைத்திருந்தவர்களே இவ்வாறு சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

சாரதியின் குடும்பத்துடன் தொடர்புடைய ஒருவர் சுகயீனமடைந்துள்ளதால் அவரைப் பார்ப்பதற்குச் சென்றவர்களே சுகாதார மருத்துவ அதிகாரியினால் அடையாளப்படுத்தப்பட்டு சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

கரைச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 54 குடும்பங்களும் கண்டாவளை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒரு குடும்பமும் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளன. என்றும் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

இதேவேளை, கிளிநொச்சியில் நேற்று மூவரின் பி.சி.ஆர். பரிசோதனையில் முடிவு எடுக்க முடியாத நிலைமை என்று ஆய்வுகூடத்தால் அடையாளப்படுத்தப்பட்ட நிலையில் அவர்களது மாதிரிகள் மீளவும் பெறப்பட்டு பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

## சுகாதார நடைமுறைக ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழிகாட்டுதல்களை பின்பற்றி சுகாதார வைத்திய அதிகாரியின் அனுமதியுடன் குறித்த நினைவேந்தல் நிகழ்வுகளை மட்டுப்படுத்தப்பட்டளவில் நடத்த முடியும் என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்

மேலும் தற்போது நாட்டில் உள்ள கொரோனா தொற்று அச்ச நிலைமை காரணமாக ஒன்று கூடல்கள் மற்றும் பொது நிகழ்வுகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் குறித்த சுனாமி இடரால் உயிரிழந்தோரை நினைவு கூரும் நிகழ்வுகளை அப்பகுதி சுகாதார பிரிவினரின் அனுமதியுடன் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையான மக்களுடன் நடாத்துவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

## அமைச்சர்களுக்கும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அது நடைமுறையில் இல்லை. கொரோனாச் சட்டம் அமைச்சர்களுக்கு ஒரு விதமாகவும் சாதாரண பொது மக்களுக்கு வேறு விதமாகவும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

ஆனால் ஜனாதிபதியின் எதிர்பார்ப்பு அனைவருக்கும் சட்டம் பொதுவானதாக இருக்க வேண்டும் என்பதே என அவர் மேலும் தெரிவித்தார்.

## மருதனார்மடம் கொத்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுதி செய்யப்பட்டுள்ளது.

தொற்றுக்குள்ளானவர் மருதனார்மடம் சந்தையில் வியாபார நடவடிக்கையில் ஈடுபடும் உடுவிலைச் சேர்ந்தவராவார். 14 நாள்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவருக்குத் தொற்று அடையாளம் காணப்படவில்லை. தனிமைப்படுத்தல் நிறைவு பெறும் போது மேற்கொள்ளப்படும் இரண்டாம் கட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே அவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்.

இதேவேளை யாழ்.போதனா வைத்தியசாலையில் இன்று பி.சி.ஆர். பரிசோதனைகள் இடம்பெறவில்லை என்றும் தெரிவித்தார்.

## முற்கூட்டியே ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விவகாரம் தொடர்பாக ஆராய்ந்து சட்டத்தை உருவாக்குவதற்கு நாடாளுமன்றத் தேர்வுக் குழுவை நியமிக்க பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார் என்று தேசிய தேர்தல் ஆணைக் குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவ தெரிவித்தார்.

ஜனவரி மாதத்தில் அந்தக் குழு பொறிமுறையை வகுக்கத் தொடங்கும் என்று அவர் எதிர்பார்க்கிறார்.

பல நபர்கள் தங்கள் வேலையின் தன்மை அல்லது அவர்களின் சூழ்நிலை காரணமாக தேர்தல்களில் வாக்களிக்கச் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டார்.

முன்னணி நிறுவனங்களின் ஊழியர்கள் மற்றும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்கள் போன்றோர் இப்போதைய நிலையில் அஞ்சல் வாக்களிப்புக்குத் தகுதியற்றவர்கள் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே தற்போதுள்ள வாக்களிப்பு பொறிமுறையில் பல மாற்றங்கள் செய்யப்படவுள்ளன எனவும், நாடாளுமன்றத் தேர்வுக் குழு மூலம் சட்டமியற்றும் செயல் முறை தொடங்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## கிளிநொச்சி கல்மடுகுளத்தில் மூழ்கி இளைஞன் உயிரிழப்பு

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கல்மடுகுளத் திற்குள் மூழ்கி இளைஞன் ஒருவன் மரணமடைந்துள்ளான்.

இச் சம்பவம் இன்று பிற்பகல் இரண்டு மணியளவில் இடம்பெற்றுள்ளது. நண்பர்கள் அடங்கலாக மூவர் கல்மடுகுளத்திற்கு சென்றுள்ளனர். இதன் போது குறித்த இளைஞன் குளத்திற்குள் இறங்கிய போதே மூழ்கி மரணமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கல்மடுநகர் சம்புக்குளத்தைச் சேர்ந்த 27 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையான இரத்தினம் லோகிதன் என்பவரே இச் சம்பவத்தில் மரணமடைந்துள்ளார். இரண்டு மணிக்கு நீரில் மூழ்கிய போதும் மாலை 6.30 மணி கடந்தும் உடல் நீரிலிருந்து மீட்கப்படாது இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாஸா எரிப்புக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் இன்று கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகர் கே.சுகாஷ், யாழ்ப்பாணம் பள்ளிவாசல் நிர்வாகிகள், உலமாக்கள், அரசியல் பிரதிநிதிகள், முஸ்லிம் வர்த்தகர்கள், யாழ்ப்பாணம் முஸ்லிம் மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

கவனவீர்ப்பில் கலந்து கொண்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகர் கே.சுகாஸ் ஆகியோர் முஸ்லிம்களின் நியாயமான கோரிக்கைக்கு தமிழ் மக்களின் ஆதரவை உறுதியாகவும், வெளிப்படையாகவும் தெரிவித்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டிருந்தனர். மேலும் யாழ்ப்பாணம் முஸ்லிம்கள் சார்பாக மௌலவி எம்.ஏ.பைசல் (மதனி) அவர்கள் கவனவீர்ப்பின் முக்கிய நோக்கம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். கொவிட் வைரஸ் தாக்கத்தை கருத்திற் கொண்டு சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்பட்டு, முகக்கவசம் அணிந்து, சமூக இடைவெளியுடன் குறித்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## 55 வயதிலும் ஓய்வு ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெறும் உரிமையை கொண்டுள்ளார் என அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற தேசிய தொழிலாளர் ஆலோசனை சபைக் கூட்டத்தில் அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தேசிய ஓய்வூதிய வயதெல்லை 60 வரை நீடிக்கப்படுமாயின், தற்போதைய கூட்டு ஒப்பந்தங்களில் கூறப்பட்ட விடயங்களையும் உள்ளடக்கி, புதிய சட்டத்தை திருத்த வேண்டிய அவசியம் உள்ளதாக முதலாளிமார் சம்மேளத்தின் பணிப்பாளர் நாயகம் கனிஷ்க வீரசிங்க தெரிவித்தார்.

இந்த விடயத்தில் ஏதேனும் நியமங்களை சேர்க்கத் தேவை ஏற்படும் பட்சத்தில், சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் பேசி, யோசனைகளை தம்மிடம் சமர்ப்பிக்குமாறும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.




காலைக்கதிர்
Kalaikkathir — மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## நாட்டுக்குப் பொருளாதார மீட்சி இப்போதைக்கு கிட்ட மாட்டாது

மக்களை வாட்டி வதைக்கும் நெருக்கடிகள் சங்கிலி வளையங்களாகத் தொடர்கின்றன. மீள முடியாமல் அவர்கள் அவதியுறுகின்றனர்.

உலகத்தையே ஆட்டிப் படைக்கும் கொரோனா வைரஸின் கொடூரம் இலங்கையையும் விட்டு வைக்கவில்லை. மக்களின் வாழ்வாதாரங்களையே அதன் தாக்கம் பெரிதும் பாதித்திருக்கின்றது.

பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாக கொரோனாக் கொடூரத்தால் நலிவுற்ற மக்களை புரெவிப் புயலின் விளைவுகளும் ஒரு கை பதம் பார்த்திருக்கின்றது.

இந்தச் சிக்கல்களினால் அந்தரிக்கும் நாட்டு மக்களுக்கு அரசிடமிருந்து சரியான உதவித் திட்டங்களோ, நிவாரணங்களோ, மானிய வசதிகளோ கிட்டவேயில்லை.

அது தங்களால் இயலாது என்பதை வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன கைவிரித்துத் தெரிவித்து விட்டார்.

*“கொவிட் 19 வைரஸ் தாக்கத்தால் பூகோள மட்டத்தில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து எம்மால் மாத்திரம் உடனடியாக மீள முடியாது. மக்களின் வாழ்க்கைச் செலவுகள் தற்போது அதிகரித்துள்ளமைக்கு பல காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன.*

*“அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் 2021 ஆம் ஆண்டுக்குப் பின்னரே கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படும்”* என்று விளக்கம் கூறுகின்றார் அவர்.

இப்படியான இயலாமையை நியாயப்படுத்த அவர் காரணங்களும் முன்வைக்கின்றார்.

*“கொரோனாத் தாக்கம் இலங்கைக்கு மட்டுமானதல்ல. செல்வந்த நாடுகளே பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றன.*

*“இரண்டாம் உலக மகாயுத்தத்தினால் இலங்கைக்கு நேரடியாகத் தாக்கம் ஏற்படவில்லை. ஆனால் பொருளாதார மட்டத்தில் தாக்கம் ஏற்பட்டது.*

*“அது போன்ற நிலைமைதான் இப்போது. சர்வதேச பொருளாதாரமே சிக்கிச் சீரழிந்திருக்கும் போது நாம் மட்டும் மீள்வது எப்படி?”* – என்று கேள்வி எழுப்பியிருக்கின்றார் நாட்டின் வர்த்தக அமைச்சர்.

2021 ஆம் ஆண்டுக்குப் பின்னரே அத்தியாவசியப் பொருள்களின் விலையைக் குறைக்க முடியும் என்கின்றார் அவர்.

அப்படியானால் பிறக்கப் போகும் புத்தாண்டிலும் இதே அவலம் தொடரப் போகின்றது. மக்களுக்கு மீட்சி இப்போதைக்கு இல்லை. மக்களை மீட்கும் திட்டம் – நம்பிக்கை – திடசங்கற்பம் – ஆட்சித் தலைமையிடம் இல்லை என்பது தெளிவு.

இந்தப் பொருளாதார நெருக்கடிகளை முகம் கொண்டு, எதிர்கொள்வதற்காக அரசுத் தலைமை இதுவரை எடுத்த பல முயற்சிகளும், நடவடிக்கைகளும் கூட அவமாகி விட்டன என்பதும் வெளிப்படை.

சீனிக்கான விலையைக் குறைக்கிறோம் என்ற பெயரில் சீனிக்கான இறக்குமதி வரியை கிலோவுக்கு ஆக இருபத்தியைந்து சதம் மட்டுமே என்ற அளவுக்கு அரசு குறைத்தது. இதனால் அர சின் வருமானம் பில்லியன் ரூபாக்களில் – நூறு கோடி ரூபாக்களில் – குறைந்தது. ஆனால் சந்தையில் சீனியின் விலை குறையவேயில்லை.

அப்படியானால், சீனிக்கான வரிக்குறைப்பால் கிட்டிய பல கோடி ரூபாக்களை அரசுக்கும் மக்களுக்கும் இடையில் இருக்கும் வர்த்தகர்கள் சுருட்டிக் கொண்டு விட்டனர் என்று அர்த்தம்.

உலக சந்தையில் எரிபொருள்களின் விலை பெரு வீழ்ச்சி கண்டுள்ளது. ஆனால் அதன் பயன் மக்களுக்கு எட்டவில்லை.

அரசினால், அத்தியாவசியப் பொருள்களின் விலைகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. முடியாது என்பது தெளிவாக, நிரூபணமாகி வருகின்றது.

இலங்கையின் வரலாற்றில் முதல் தடவையாக தேங்காய்க்கு விலையும் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டது. ஆனால் அந்த விலையில் தேங்காய் எங்குமே கிடையாது என்பதுதான் நிலைமை.

பல வர்த்தகத் துறைகள், பொருளாதார மையங்கள் போன்றவை வர்த்தகத் துறை அமைச்சரிடம் – அவரின் அமைச்சின் கீழ் – இல்லை.

உதாரணத்துக்கு வர்த்தகத்துறையில் மிக முக்கியமானது ச.தொ.ச. அதுவும் கூட வர்த்தகத்துறை அமைச்சரின் கீழ் இல்லை. அது ஜனாதிபதியின் கீழ்.

இத்தகைய சூழலில் மக்களின் அத்தியாவசியத் தேவையான முக்கிய பொருள்கள், பண்டங்களைத் தட்டுப்பாடின்றி, சீரான விநியோக முறையில், நியாய விலையில் வழங்குவதை வர்த்தக அமைச்சரால் எவ்வாறு உறுதிப்படுத்த முடியும்? – தமது கையை விரித்து இயலாமையைக் கூறுவதைத் தவிர.

இத்தகைய நிலைமை தொடருமானால், விரைவில் மக்கள் வீதியில் இறங்கிப் போராடும் கட்டாயம் நேரும். 2020 இல் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையோடு நாடாளுமன்றத்தின் அதிகாரத்தையும் மொட்டுக் கட்சிக்கு வழங்கிய மக்கள் அந்த அரசை வீட்டுக்கு அனுப்பவும் பின்நிற்கமாட்டார்கள்.

இது ‘ராஜபக்ஷ அண்ட் பிறதர்ஸ் கம்பனி’க்குப் புரிந்தால் சரி.

## மேய்ச்சல் தரை விவகாரத்தால் முறிகண்டிப் பகுதியிலும் சிக்கல்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிச.25

மட்டக்களப்பு மாவட்டத்தில் பேரினவாத ஆக்கிரமிப்பால் மேய்ச்சல் தரைப் பிரச்சினை ஏற்பட்டது என்றால் வன்னிப் பிரதேசங்களில் வேறு வடிவில் மேய்ச்சல் தரைப் பிரச்சினை உருவாகியுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட கால் நடை வளர்ப்பாளர்கள் முல்லைத்தீவு மாவட்டத்தின் முறிகண்டி மற்றும் கொக்காவில் பகுதிகளில் தமது பட்டிகளை அமைத்து மேய்ச்சலில் ஈடுபடுவதனால் அப் பகுதி கால் நடை வளர்ப்பாளர்களும், விவசாயிகளும் பெரும் சிரமத்தை எதிர்கொள்கின்றனர் என முறிகண்டி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் குணரத்தினம் மணிவண்ணன் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் மூன்று பெரும் பண்ணையாளர்கள் சுமார் ஆயிரத்து 500 மாடுகளை இப்பகுதியில் பட்டியிட்டு மேய்ச்சலில் ஈடுபடுகின்றனர். இது கடந்த ஆண்டு முதல் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றது. இப் பகுதியில் பட்டி அடைக்கப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தடை விதித்துத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

இத்தனைக்கும் மத்தியில் இன்றுவரை இந்த பட்டிகள் அங்கிருந்து அப்புறப்படுத்தப்படவில்லை. இதனால் இப் பகுதியில் உள்ள விவசாயிகளும் கால் நடை வளர்ப்போரும் பெரும் சிரமத்தை எதிர்கொள்கின்றோம். இருப்பினும் எவருமே கண்டு கொள்வது கிடையாது. ஏனெனில் இது தொடர்பில் பிரதேச செயலாளரிடம் முறையிட்டால் அவர் கமநல சேவைத் திணைக்களத்தை நாடுமாறு கூறுகின்றார். கமநல சேவைத் திணைக்களமோ பிரதேச சபையைக் கையைக் காண்பிக்கிறது.

பிரதேச சபையோ தம்மாலும் அவர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை எனத் தெரிவித்து பொலிஸாரிடம் எழுத்தில் முறையிட்டு எமக்கும் தெரியப்படுத்தினர். பொலிஸார் ஒரு தடவை வந்து இங்கே பட்டி போட வேண்டாம், அகன்று செல்லுங்கள் எனக்கூறிவிட்டுச் சென்றனர். ஆனாலும் தீர்வு மட்டும் கிட்டவில்லை என கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் கால்நடை உரிமையாளர்களைத் தொடர்பு கொண்டு கேட்டபோது–

போரிற்கு முன்பு இரணைமடுக் குளத்தை அண்டிய பகுதியிலும் கனகாம்பிகை அம்மன் ஆலயத்திற்கு பின்புறமும் பட்டி அமைத்திருந்தோம். ஆனால் போரிற்கு பின்பு இப் பகுதிகளை இராணுவம் அபகரித்து முகாம் அமைத்து விட்டனர். இதனால் எமக்கு மாற்று இடமும் வழங்கப்படாது போக்கிடம் அற்ற நிலையில் மேய்ச்சல் தரையும் இன்றி அவலத் தின் மத்தியிலேயே இந்தத் தொழிலை மேற்கொள்ள வேண்டியுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

## விலங்குக்கு வைத்த பொறியில் சிக்கி சிவில் பாதுகாப்புப் படை வீரர் சாவு!



வவுனியாவின் மகாகச்சக்கொடி – அலுத்வத்த பகுதியில் வியாழக்கிழமை காலை பாதுகாப்பற்றிருந்த மின் இணைப்பில் சிக்கி சிவில் பாதுகாப்புப் படை வீரர் உயிரிழந்துள்ளார் என மாமடுவ பொலிஸார் தெரிவித்தனர்.

விலங்குகளை வேட்டையாடுவதற்காக வைக்கப்பட்ட மின் இணைப்பில் சிக்கியே சிவில் பாதுகாப்புபடை வீரர் ஒருவர் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் வவுனியா மகாகச்சகொடியவில் வசிக்கும் அச்சிந்த திஸாநாயக்க (வயது – 34) என்பவராவார்.

இறந்த சிவில் பாதுகாப்புப் படை வீரர் அலுத்வத்த காட்டு விலங்குகளைத் துரத்தச் சென்றிருந்தபோது விபத்து நடந்திருக்கலாமென பொலிஸார் தெரிவித்தனர்.

பாதுகாப்பற்ற மின் இணைப்புகளை அமைத்த நபர் யாரென இதுவரை கண்டு பிடிக்கப்படவில்லை எனவும், இது தொடர்பான விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இறந்த சிவில் பாதுகாப்புப் படை வீரரின் உடல் திடீர்மரண விசாரணை அதிகாரியின் விசாரணையின் பின்னர் பிரேத பரிசோதனைக்காக வவுனியா பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படவுள்ளது.

மாமடுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இணையத்தில் அழகிகள் விற்பனை 9 பெண்கள் உட்பட 11 பேர் கைது!

இணையத்தின் ஊடாக அழகிகளை விற்ற கும்பலொன்றை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இதன் போது 9 பெண்கள் உட்பட 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கல்கிஸ்ஸ பகுதியில் இருமாடி சொகுசு வீடொன்றில் இந்த சட்டவிரோத செயற்பாடு இடம்பெறுவதாக குற்றத்தடுப்பு பிரிவுக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இதனடிப்படையில் கல்கிஸ்ஸ பொலிஸார் பல நாள்களாக அந்த வீடு மற்றும் அங்கு உள்ளவர்கள் தொடர்பாகக் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இவ்வாறானதொரு நிலையில் கல்கிஸ்ஸ நீதிவான் நீதிமன்ற அனுமதியுடன் குறித்த வீடு சோதனைக்குட்படுத்தப்பட்டது. இதன் போதே 9 பெண்கள் உட்பட 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அங்கொட லொக்காவுக்கு சொந்தமான துப்பாக்கிகள், கைக்குண்டுகள் மீட்பு!

முல்லேரியா பகுதியில் பாதாளகுழு தலைவரான அங்கொட லொக்காவுக்கு சொந்தமான துப்பாக்கிகள், கைக்குண்டுகள் மற்றும் மகசின்கள் என்பன பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் மீட்கப்பட்டுள்ளன.

முல்லேரியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செலிஹினி மாவத்தையில் கடந்த புதன்கிழமை பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

இதன் போது குறித்த பகுதியில் புதைக்கப்பட்டிருந்த , ஜேர்மன் நாட்டு துப்பாக்கி, துருக்கி நாட்டு துப்பாக்கி ஒன்றும், 30 ரவைகளை போட்டு வைக்க கூடிய மகசினொன்றும், 15 ரவைகளை வைக்கக்கூடிய மகசின்கள் மூன்றும் மற்றும் 14 ரவைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த சட்டவிரோத ஆயுதங்கள் இந்தியாவில் உயிரிழந்தார் எனக் கூறப்படும் பாதாள குழு தலைவரான அங்கொட லொக்காவுக்குச் சொந்தமானவை என்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் சந்தேகிக்கின்றனர்.

இந்த நவீன தரத்திலான துப்பாக்கிகள் எம் நாட்டு பாதுகாப்பு படையினரிடம் கூட இல்லை என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். இந்த துப்பாக்கிகள் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

சமூக நல அறிவிப்பு



# 14 நாள்கள் தனிமைப்படுத்தல் ஏன் அவசியம்?

கொரோனா பாதிக்கப்பட்டவர்களை அரசு உடனடியாக மருத்துவமனைகளில் தனி வார்டுகளில் வைத்து கண்காணிப்பதற்கு முக்கியக் காரணம் நோயின் தீவிரம் அதிகம் என்பதாலேயே. இதை உணராமல் பலர் அலட்சியப்படுத்துவதே விபரீதமாகும்.





ஒரு கொரோனா நோயாளி எத்தனை பேருக்கு நோயைப் பரப்பியுள்ளார் என்பதை உடனடியாக பரிசோதித்து கண்டுபிடித்துவிட முடியாது அதனால் அவருடன் தொடர்பில் இருந்தவர்களை 14 நாள்கள் தனிமைப்படுத்தவில்லை என்றால், நோய் பரவலைக் கட்டுப்படுத்துவது மிகக் கடினம்.

நோய்க்கான மருந்து கண்டுபிடிக்கப்படாத நிலையில்,நோய் தாக்கப்பட்டவர் 14 நாள்கள்

சமூக அக்கறையுடன் - கொரோனா தொடர்பான விழிப்புணர்வுத் தகவல்களை உங்களுக்கு வழங்க இன்று அனுசரணை வழங்குகின்றனர்:-


# கல்யாணமாலை

## வட சர்வதேச திருமண சேவை



Kalyanamalai Vada.com இணையவழிமூலமாக மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப்படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முகநூலிலும் விண்ணப்பம் உண்டு.



உப அலுவலகம்,
சந்தை வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை.
சனி, ஞாயிறு மற்றும் போயா
தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.
பதிவுக் கட்டணம் 1000 + 300.
க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

077 3434 415
077 8578 528

# பல்வேறு வழக்குக் குற்றவாளிகள் 29 பேருக்கு ட்ரம்ப் பொதுமன்னிப்பு!

பல்வேறு வழக்குகளில் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்ட இரு முன்னாள் உதவியாளர்கள், நெருங்கிய உறவினர் உள்ளிட்ட 29 பேருக்கு அமெரிக்க ஜனாதிபதி ரொனால்ட் ட்ரம்ப் பொதுமன்னிப்பு வழங்கியுள்ளார்.

தனது பதவிக் காலம் முடிவடைவதற்கு இன்னும் ஒரு மாதமே இருக்கும் நிலையில் ஏராளமான குற்றவாளிகளுக்கு ட்ரம்ப் இவ்வாறு பொதுமன்னிப்பு வழங்கியுள்ளமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இதில் கடந்த 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் ரஷ்யா தலையீடு செய்ததாகக் கூறப்படும் வழக்கில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட பால் மானாஃபோர்ட்டுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும், இந்த வழக்கில் குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட ரோஜர் ஸ்டோனுக்கும் நிபந்தனையற்ற பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.



இதுமட்டுமன்றி, வரி ஏய்ப்பு வழக்கில் சிறைத் தண்டனை பெற்ற சார்லஸ் குஷ்னருக்கும் ட்ரம்ப் பொது மன்னிப்பு அளித்துள்ளார். இவர் ட்ரம்ப் மகள் இவாங்காவின் மாமனார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த மூவரைத் தவிர, மேலும் 26 பேருக்கு ட்ரம்ப் பொதுமன்னிப்பு வழங்கியுள்ளார் எனவும் வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

ஏற்கெனவே, ரஷ்யத் தலையீடு விவகாரத்தில் சிறைத் தண்டனை பெற்ற ட்ரம்ப்பின் முன்னாள் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மைக்கேல் ஃபிளைன், ஆப்கானிஸ்தானில் அப்பாவி பொதுமக்களை படுகொலை செய்த இராணுவ வீரர்கள் உள்ளிட்ட சர்ச்சைக்குரிய பலருக்கு ட்ரம்ப் பொதுமன்னிப்பு வழங்கியுள்ளார்.

மேலும், இன்னும் ஒரு மாதத்தில் தனது பதவிக் காலம் முடிவடைவதற்குள், குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்ட தனது முன்னாள் தலைமை திட்ட ஆலோசகர் ஸ்டீவ் பேனன், அந்தரங்க வழக்குரைஞர் ரூடி கியூலியானி உள்ளிட்ட ஏராளமானவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்குகின்றமை தொடர்பாக ட்ரம்ப் ஆலோசித்து வருகிறார் என அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

## இயேசு அவதரித்த பெத்தலகேமில்
# கிறிஸ்மஸ் சிறப்பு பிரார்த்தனையில் பங்கேற்க பக்தருக்கு அனுமதிமறுப்பு!

கொரோனா வைரஸ் காரணமாக பெத்தலகேம் நகரில் நடைபெறும் கிறிஸ்மஸ் சிறப்பு பிரார்த்தனைக் கூட்டத்தில் பங்கேற்க பக்தர்களுக்கு அனுமதி இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

யேசு கிறிஸ்து பூமியில் அவதரித்த தினமான டிசெம்பர் 25 ஆம் திகதி உலகம் முழுவதும் உள்ள கிறிஸ்தவர்களால் கிறிஸ்மஸ் பண்டிகை ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது.

இயேசு கிறிஸ்து பிறந்த பெத்தலகேம் நகரம் தற்போது பலஸ்தீனம் நாட்டுக்கு உட்பட்ட காசா பகுதியில் அமைந்துள்ளது.

கிறிஸ்மஸ் தினத்தன்று பெத்தலகேம் நகரில் நடைபெறும் பிரார்த்தனை கூட்டம் மிகச் சிறப்பான நிகழ்வாகக் கருதப்படுகிறது. இதற்காக ஆண்டுதோறும் உலகம் முழுவதிலும் இருந்து லட்சக்கணக்கான மக்கள் பெத்தலகேம் வருகின்றமை வழக்கம்.

ஆனால் இந்த ஆண்டு கொரோனா வைரஸ் காரணமாக பெத்தலகேம் நகரில் நடைபெறும் கிறிஸ்மஸ் சிறப்பு பிரார்த்தனைக் கூட்டத்தில் வெளிநாடுகள் மற்றும் பாலஸ்தீனத்தின் ஏனைய பகுதிகளிலிருந்து வரும் பக்தர்களுக்கு அனுமதி இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பெத்தலகேம் நகர மேயர் ஆன்டோன் சல்மான் கூறுகையில்:-

இந்த கிறிஸ்மஸ் திருநாளில் பெத்தலகேமில் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளும் உள்நாட்டின் ஏனைய பகுதிகளைச் சேர்ந்தவர்களும் அனுமதிக்கப் படமாட்டார்கள்.

பெத்தலகேம் நகரைச் சேர்ந்தவர்களும் மிகவும் குறைவான எண்ணிக்கையிலேயே அனுமதிக்கப்படுவார்கள். இந்த ஆண்டு கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களில் மத விழாக்கள் மட்டுமே இடம்பெறும்.- எனக் கூறினார்.

# நைஜீரியாவில் மரபணு மாற்றம் பெற்ற மற்றுமொரு கொரோனா கண்டுபிடிப்பு!

ஆபிரிக்காவில் மக்கள்தொகை அதிகமுள்ள நைஜீரியாவில் மரபணு மாற்றம் பெற்ற மற்றுமொரு கொரோனா வைரஸ் கண்டறியப்பட்டுள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இதனால் அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதோடு, மக்கள் அனைவரையும் அவதானமாக இருக்குமாறு அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இந்த நிலையில், இந்த வைரஸ் தொடர்பாக விரிவாக ஆராய வேண்டியிருப்பதாக ஆபிரிக்க நோய்த்தொற்று தடுப்பு மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

பிரித்தானியா தவிர டென்மார்க், பெல்ஜியம், நெதர்லாந்து, ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா உள்ளிட்ட நாடுகளிலும் கொரோனா வைரஸ் தனது மரபணுவை மாற்றிக் கொண்டுள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

# ஐரோப்பிய ஒன்றியம் - பிரித்தானியா இடையே வர்த்தக ஒப்பந்தம் கைச்சாத்து!



ஐரோப்பிய ஒன்றியமும் பிரித்தானியாவும் பிரெக்சிற்றுக்குப் பின்னரான வர்த்தக ஒப்பந்தத்தை எட்டியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மீன்பிடி உரிமைகள் மற்றும் எதிர்கால வர்த்தக விதிகள் தொடர்பாக பலமாக கருத்து வேறுபாடுகள் நேற்றுடன் (வியாழக்கிழமை) முடிவுக்கு வந்துள்ளன.

இது தொடர்பாக, டவுனிங் ஸ்ட்ரீற் பத்திரிகையாளர் சந்திப்பில் பேசிய பிரித்தானிய பிரதமர் பொரிஸ் ஜோன்சன், சட்டங்கள் மற்றும் விதியின் கட்டுப்பாட்டை திரும்பப் பெற்றுள்ளதாக அறிவித்துள்ளார்.

அத்துடன், வர்த்தகப் பேச்சுகள் கடுமையானவை என்றாலும், இது முழு ஐரோப்பாவிற்கும் நல்லதோர் ஒப்பந்தம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இந்த ஒப்பந்தம் நியாயமான மற்றும் சீரானது என ஐரோப்பிய ஒன்றியத் தலைவர் உர்சுலா வொன் ஷெடர் லேயன் கூறியுள்ளார்.

பிரஸ்ஸல்ஸில் செய்தியாளர் சந்திப்பில் பேசிய அவர் -

பிரித்தானியாவுடனான வர்த்தக ஒப்பந்தம் நீண்ட மற்றும் நெருக்கடியான நிலையை அடைந்ததாகவும், எனினும் தற்போது நல்ல ஒப்பந்தம் கிடைத்துள்ளதாகவும் லேயன் குறிப்பிட்டுள்ளார்.

# மெக்ஸிகோவில் கொரோனா தொற்றிலிருந்து 10 லட்சத்துக்கும் மேற்பட்டோர் மீண்டுள்ளனர்!

மெக்ஸிகோவில் கொரோனா வைரஸ் (கொவிட் - 19) பெருந்தொற்றிலிருந்து பத்து லட்சத்துக்கும் மேற்பட்டோர் பூரண குணமடைந்துள்ளனர்.

அண்மைய உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்களின் படி, மெக்ஸிகோவில் வைரஸ் தொற்றால் பத்து லட்சத்து 50 ஆயிரத்து 248 பேர் குணமடைந்துள்ளனர்.

உலகளவில் கொவிட் - 19 தொற்றால் அதிக பாதிப்பை எதிர்கொண்ட 13 ஆவது நாடாக விளங்கும் மெக்ஸிகோவில் 13 லட்சத்து 50 ஆயிரத்து 79 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும், ஒரு லட்சத்து 20 ஆயிரத்து 311 பேர் உயிரிழந்துள்ளனர்.

தற்போதுவரை வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட இரண்டு லட்சத்து 24 ஆயிரத்து 520 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் மூவாயிரத்து 913 பேர் தீவிர சிகிச்சை பிரிவில் உள்ளனர்.




# குருகுலம் தமிழ் மொழி ஒளிபரப்பு அட்டவணை

| 26.12.2020 | சனிக்கிழமை |
|---|---|
| 04.00 - 04.55 | தரம் - 12 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் |
| 05.00 - 05.55 | தரம் - 13 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் |
| 06.00 - 06.55 | தரம் - 12 உயிரியல் |
| 08.00 - 08.55 | தரம் - 10 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் |
| 09.00 - 09.55 | தரம் - 11 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் |
| 10.00 - 10.55 | தரம் - 10 தமிழ் |
| 11.00 - 11.55 | தரம் - 11 தமிழ் |
| 12.00 - 12.55 | தரம் - 12 இரசாயனவியல் |
| 13.00 - 13.55 | தரம் - 13 இரசாயனவியல் |
| 14.00 - 14.25 | தரம் - 06 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் (1ஆம், 2ஆம்)<br>தரம் - 07 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் (2ஆம், 4ஆம்) |
| 14.30 - 15.55 | தரம் - 08 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் (1ஆம், 3ஆம்)<br>தரம் - 09 தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் (2ஆம், 4ஆம்) |
| 15.00 - 15.55 | தரம் - 12 தமிழ் |
| 16.00 - 16.55 | தரம் - 13 தமிழ் |
| 17.00 - 17.55 | தரம் - 13 உயிரியல் |
| 18.00 - 18.55 | தரம் - 08 ஆங்கிலம் (1ஆம், 3ஆம்)<br>தரம் - 09 ஆங்கிலம் (2ஆம், 4ஆம்) |
| 22.30 - 23.25 | தரம் - 12 பொறியியல் தொழிநுட்பம் |
| 23.30 - 24.30 | தரம் - 13 பொறியியல் தொழிநுட்பம் |

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# இந்தியாவுடன் பேச்சு இல்லை; பாகிஸ்தான் தரப்பு திட்டவட்டம்

இஸ்லாமாபாத்,டிசெ.25

தற்போது இருக்கும் சூழலில், இந்தியாவுடன் பேச்சு நடத்த முடியாது என பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் மெஹ்மூத் குரேஷி கூறியுள்ளார்.



இந்தியாவின் அண்டை நாடான பாகிஸ்தான் பயங்கரவாத அமைப்புகளுக்கு அடைக்கலம் கொடுத்து, பயங்கரவாத செயல்களை ஊக்குவிக்கும் முயற்சிகளில், தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது என இந்தியா குற்றம் சுமத்துகிறது.

இந்திய எல்லைப் பகுதிக்குள் ஊடுருவி, தாக்குதல்களை நடத்த, பயங்கரவாதிகள் சதித் திட்டங்களை தீட்டுகின்றனர்.

எனினும் அவற்றை, இந்திய எல்லை பாதுகாப்புப் படையினர் முறியடித்து வருகின்றனர் என்றும் இந்தியா கூறுகின்றது.

இதற்கிடையே, லடாக் எல்லைப் பகுதியில், சீன இராணுவமும், அத்துமீறல்களில் ஈடுபட்டு வருகிறது. எல்லையில் இதனால் ஏற்பட்டுள்ள பதற்றத்தை தணிக்க, இருநாட்டு உயரதிகாரிகளும் தொடர்ந்து பேச்சு நடத்தி வருகின்றனர்.

எனினும் பாகிஸ்தான் தரப்பில், எந்தவொரு முயற்சியும் இதுவரை முன்னெடுக்கப்படவில்லை.

இந்தியா – பாகிஸ்தான் இடையே, மோதல் போக்கு நிலவி வரும் நிலையில், பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் ஷா மெஹ்மூத் குரேஷி நேற்று நிருபர்களை சந்தித்துப் பேசினார். அப்போது, இந்தியாவுடனான உறவு குறித்தும், சில கருத்துக்களை அவர் முன்வைத்தார்.

அப்போது அவர் கூறுகையில்,தற்போது இருக்கும் சூழலில், இப்போது இந்தியாவுடன் பேச்சு நடத்த, எங்களால் முடியாது. இந்த நேரத்தில் பேச்சு நடத்துவதற்கு, சூழல்கள் சாதகமாக இல்லை என்றார்.

# திருப்பதி மலையில் மயக்கமுற்ற பக்தர்களை 6 கி.மீ. சுமந்து காப்பாற்றிய முஸ்லிம் காவலர்



திருப்பதி, டிசெ.25

ஏழுமலையானை தரிசிப்பதற்காக மலைப் பாதை வழியாக வந்த வயதான பக்தர்கள் இருவர் மயக்கமடைந்திருந்த நிலையில், அவர்களை முஸ்லிம் காவலர் ஒருவர் 6 கிலோ மீற்றர் சுமந்து சென்று காப்பாற்றியுள்ளார்.

கொரோனா சூழலால் திருப்பதி ஏழுமலையான் கோயிலுக்கு பக்தர்கள் வருகைக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தது. 10 வயதிற்குட்பட்ட குழந்தைகள், 55 வயதிற்கு மேற்பட்ட முதியவர்களை அனுமதிக்காமல் இருந்தனர். கடந்த சில நாள்களுக்கு முன்பு அவர்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டது. தற்போது தினமும் 30 ஆயிரம் பக்தர்கள் தரிசனத்திற்கு சென்று வருகின்றனர். வைகுண்ட ஏகாதசியையொட்டி 10 நாள்கள் சொர்க்கவாசல் திறக்கப்படுகிறது. 2 லட்சம் பக்தர்கள் சொர்க்கவாசல் வழியாக தரிசிக்க டிக்கெட்டுகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

இந்த நிலையில் கடந்த 22 அன்று ஒரு வயதான தம்பதியினர் மலைப்பாதை வழியாக கோயிலுக்குச் சென்றுள்ளனர். அவர்களுக்கு திடீரென மயக்கம் ஏற்பட்டுள்ளது. அந்த இடத்தில் பணியில் இருந்த ஷேக் அர்த் என்ற காவலருக்கு இது குறித்த தகவல் கிடைத்தது. உடனே அங்கு விரைந்த அவர், முதலில் வயதான ஆணை தனது முதுகில் சுமந்து சென்று சாலையில் விட்டுள்ளார். பின்னர் 58 வயது நாகேஷ்வரம்மா என்ற பெண்மணியையும் சுமந்து சென்று இறக்கிவிட்டுள்ளார். அங்கிருந்து அவர்கள் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இந்தப் படத்தை ஆந்திர பொலிஸார் தங்களின் டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டு காவலர் ஷேக் அர்த்தை பாராட்டியுள்ளனர். இச்செயல் அவரது பணியின் மீது அவருக்குள்ள பக்தியைக் காட்டுகிறது என மாநில டி,ஜி.பி. புகழ்ந்துள்ளார்.

# சீல் வைத்த லொக்கரில் இருந்து 103 கிலோ தங்கம் மாயமானது!

## சி.பி.ஐ. மீது திருட்டு வழக்கு பதிவு


சென்னை,டிசெ.25

சென்னையில் உள்ள தனியார் நிறுவனத்தில் கடந்த 2012 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட சோதனையில் 400.47 கிலோ தங்கம் பறிமுதல் செய்யப்பட்டது. அந்த தங்கம் அந்த நிறுவன அலுவலகத்தில் உள்ள லொக்கரில் பாதுகாப்பாக வைத்து 'சீல்' வைக்கப்பட்டது. அதற்கான சாவிகளும் உயர்நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டது.

இந்த நிலையில் நீதிமன்ற உத்தரவின்பேரில், கடந்த பெப்ரவரி மாதம் அந்த லாக்கர் திறக்கப்பட்டது. ஆனால் அதில் 296.66 கிலோ தங்கமே இருந்தது. பறிமுதல்செய்யப்பட்ட தங்கம்சி.பி.ஐ.க்கு சொந்தமான பண்டக சாலையில் வைக்கப்படவே இல்லை. அந்த தங்கம் முழுமையாக சம்பந்தப்பட்ட அந்த நிறுவன அலுவலகத்தில் உள்ள லொக்கரில்தான் வைக்கப்பட்டிருந்தது.

லொக்கரில் உள்ள தங்கம் குறைந்தது குறித்து விசாரணை நடத்த சி.பி.சி.ஐ.டி. பொலிஸாருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது. இந்நிலையில் தற்போது சி.பி.ஐ. மீது சி.பி.சி.ஐ.டி. பொலிஸார் திருட்டு வழக்குப் பதிவு செய்துள்ளனர். இதனைத் தொடர்ந்து இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளையும் விசாரணைக்கு உட்படுத்த சி.பி.சி.ஐ.டி. பொலிஸார் முடிவு செய்துள்ளனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ரஜினிகாந்த் ஆஸ்பத்திரியில் அனுமதி



நடிகர் ரஜினிகாந்த் ஹைதராபாத்தில் அப்போலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

'அண்ணாத்த' படப்பிடிப்பிற்காக ரஜினி ஹைதராபாத் சென்றிருந்த நிலையில், படப்பிடிப்பில் பங்கேற்ற 4 பேருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து கடந்த 22ஆம் திகதி ரஜினிக்கும் கொரோனா பரிசோதனை செய்யப்பட்டு, நெகடிவ் என முடிவு வந்தது.

இருப்பினும், அறிகுறிகள் எவையும் வெளிப்படுகின்றனவா என்பதைக் கண்டறியவும், பாதுகாப்பிற்காகவும் ரஜினிகாந்த் தன்னைத்தானே தனிமைப்படுத்திக் கொண்டிருந்தார்.

இந்நிலையில், இன்று காலை, திடீரென ரத்த அழுத்தம் அதிகமாகி ரஜினிக்கு மயக்கம் ஏற்பட்டதால் ஹைதராபாத் ஜூப்ளி ஹில்ஸ் பகுதியில் உள்ள அப்போலோ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதுகுறித்து அப்போலோ மருத்துவமனை நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், ரஜினிகாந்த் இன்று காலை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஜினிகாந்துக்கு எவ்வித கொரோனா அறிகுறியும் இல்லை என்றும், அதேசமயம் இரத்த அழுத்தத்தில் ஏற்ற – இறக்கம் தீவிரமாக இருந்ததால், அதற்கான சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் எனவும் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

இரத்த அழுத்தம் சீராகும் வரை மருத்துவக் கண்காணிப்பில் வைக்கப்பட்டு, சீரடைந்த பிறகே அவர் வீடு செல்ல அனுமதிக்கப்படுவார் என்றும் ஹைதராபாத் அப்போலோ கூறியுள்ளது.

நடிகர் ரஜினிகாந்துக்கு ஏற்ற –இறக்கமான இரத்த அழுத்தம், தளர்ச்சி இருந்தாலும், இரத்த ஓட்டத்தில் எவ்வித பிரச்சனையும் இல்லை என்றும், வேறு அறிகுறிகள் ஏதுமில்லை என்றும் அப்போலோ மருத்துவமனை நிர்வாகம் கூறியுள்ளது.

# கமலின் கட்சிச் செயலாளர் பா.ஜ.கவில் இணைந்தார்!

சென்னை,டிசெ.25

நடிகர் கமல்ஹாசனின் மக்கள் நீதி மய்யத்தின் பொதுச்செயலாளரான அருணாச்சலம் பாரதிய ஜனதா கட்சியில் இணைந்தார்.

மக்கள் நீதி மய்யத்தின் பொதுச் செயலாளராக இருந்த அருணாச்சலம் சென்னையில் உள்ள கமலாலயத்தில் மத்திய அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் முன்னிலையில் பா.ஜ.கவில் இன்று இணைந்தார்.

பின்னர் அவர் கூறியதாவது:–

தொலைநோக்கு சிந்தனையுடன் வேளாண் சட்டங்களை மத்திய அரசு கொண்டு வந்துள்ளது. ஒரு விவசாயியாக இது பயனுள்ள திட்டமாகும். புதிய வேளாண் சட்டங்களை மக்கள் நீதி மய்யம் ஆதரிக்காததால் அக்கட்சியில் இருந்து விலகி பா.ஜ.கவில் இணைந்துள்ளேன். விவசாயிகள் நலன் கருதி பா.ஜ.கவில் இணைந்தேன்.




– இவ்வாறு அவர் கூறினார்.

நடிகர் கமல்ஹாசன் மக்கள் நீதி மய்யம் கட்சி தொடங்கியது முதலே அக்கட்சியில் அருணாச்சலம் பொறுப்பு வகித்து வந்தது குறிப்பிடத்தக்கது.

கல்யாணமாலை

வட சர்வதேச திருமண சேவை

மணமகன் விவரம்
பிறந்த திகதி - 1991.10.21
மதம் - இந்து ஆசாரி
நட்சத்திரம் - உத்திரட்டாதி
சூ/செவ் - 10 இல்
பாவம் - 14 1/2
கல்வி - A/L
தொழில் - நகைத்தொழில்
எதிர்பார்ப்பு - சாதாரண பெண்

மணமகள் விவரம்
பிறந்த திகதி - 1991.09.04
மதம் - இந்து ஆசாரி
நட்சத்திரம் - ஆயிலியம்
பாவம் - 29 1/2
செவ் - 1 இல்
கல்வி - பட்டதாரி
தொழில் - ஆசிரியர்
எதிர்பார்ப்பு - அரச தொழில்.

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.

க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

உப அலுவலகம்,
சந்தை வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

077 3434 415
077 8578 528

மாலை திருமண சேவை
Maalai Matrimony
இணையத்தள திருமண சேவை
www.maalai.com
இணைய வழியாக உங்கள் துணையைத்தேட எங்களை நாடுங்கள்!

வாடிக்கையாளர்/ நண்பர்கள் 2021ஆம் ஆண்டுக்கான பஞ்சாங்கக் கலண்டறை எமது அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு - 077 408 8241
இணையத் தளம் - www.maalai.com
DMI தனியார் கல்வி நிலையத்திற்கு அருகில், யாழ்ப்பாணம்.

# பொருளாதார, சமூக, கலாச்சார உரிமைகளை யாப்பில் உள்ளடக்குவதற்கான கலந்துரையாடல்

உணவை முதன்மையாக கொண்ட தகவல் மற்றும் நடவடிக்கைகளுக்கான இலங்கை வலையமைப்பினால் (FIAN SRI LANKA) பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகளை (ESCR) யாப்பில் உள்ளடக்குவதற்கான முன்மொழிவுகளை பெற்றுக்கொள்வதற்கான தேசிய மட்ட கலந்துரையாடல் இன்று இணையவழியில் நடைபெற்றது.

இந்த கலந்துரையாடலில் அனைத்து மாவட்டங்களையும் சேர்ந்த சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தார்கள்.

இதில் உணவு மற்றும் ஊட்டச்சத்து மற்றும் வறுமையிலிருந்து விடுபடுவதற்கான உரிமை, கல்விக்கான உரிமை, சுகாதாரத்துக்கான உரிமை, வீட்டுவசதிக்கான உரிமை, ஆரோக்கியமான சுற்றுச்சூழல்மற்றும்இயற்கைவளங்களுக்கான உரிமை, நிலம் மற்றும் சொத்துரிமை, வேலை செய்வதற்கான உரிமை மற்றும் தொழிலாளர்களின் உரிமை, நீருக்கான உரிமை, கலாச்சார உரிமைகள் தொடர்பான முன்மொழிவுகள் கலந்துரையாடப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்டன.

பெற்றுக்கொள்ளப்பட்ட முன்மொழிவுகள்உணவை முதன்மையாககொண்ட தகவல் மற்றும் நடவடிக்கைகளுக்கான இலங்கை வலையமைப்பினால் புதிய யாப்பினை உருவாக்குவதற்கான நிபுணர் குழுவிடம் கையளிக்கப்பட உள்ளது.

# மீள்பாவனை செய்யக்கூடிய முகக்கவசங்கள் அன்பளிப்பு





மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி முன்பள்ளி மற்றும் ஆரம்பகல்வி அறநெறி பாடசாலை கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் பியல் நிஷாந்த டி சில்வாவிடம் திருமதி பவதாரணி ராஜசிங்கம் SOLVE நிறுவனம் சார்பாக மீள்பாவனை செய்யக்கூடிய இருபதாயிரம் முகக்கவசங்களை வழங்கிவைத்தார்.

சர்வதேசரீதியில் பரவலாக கொரோனா வைரஸின் தாக்கம் எதிர்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்நிலையில் மக்கள் தமது இயல்புவாழ்க்கையினை முன்னெடுக்க கட்டாய தேவையொன்றும் உள்ளது. இலங்கையைப் பொறுத்தவரையில் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள்ளேயே தொற்று இருப்பதாக நம்பப்படுகின்றது.

இதனடிப்படையில் கல்வி மற்றும் வேலை போன்ற தேவைகளுக்காக சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரையில் சமூகத்தில் ஊடாட வேண்டியதன் தேவையை கருத்தில் கொண்டு SOLVE அதனது பங்களிப்பாக முன்பள்ளி சிறார்கள் மற்றும் ஆசிரியர்களுக்காக முதல் கட்டமாக இருபதாயிரம் வரையிலான - மீள்பாவனைசெய்யக்கூடிய-முகக்கவசங்களை வழங்கியுள்ளது. அமைச்சர் பியல் நிஷாந்த டி சில்வாவை அவரது அமைச்சில் சந்தித்த SOLVE நிறுவனர் பவதாரணி ராஜசிங்கம் அவரிடம் இவற்றைக் கையளித்தார். இந்த முகக்கவசங்களை பொறுத்தவரையில் அவை பார்ப்பதற்கு சிறுவர்களை கவரும் வகையில் ஓவியங்களைக் கொண்டிருப்பதனால் அவர்களுக்கு பிடித்ததாக அமையும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்

SOORYA
சிறந்த 10 ஆக்கங்களுக்கு
SOORYA நத்தார் பரிசுப் பொதிகள்!!
இந்த பண்டிகைக் காலத்தில் சூர்யாவிடமிருந்து 4,000 ரூபா பெறுமதியான பரிசுப்பொதிகளை வெல்லுங்கள்!!
நீங்கள் செய்ய வேண்டியது:-
fb.com /Sun Match
1. எமது சூர்யா Sun Match Facebook page ஐ Like செய்து போட்டிக்கான Post ஐ உங்களது timeline இல் Share செய்யுங்கள்.
2. சூர்யா மெழுகுவர்த்திகளைக் கொண்டு நீங்கள் தயாரித்த அலங்காரத்தைப் புகைப்படமெடுத்து அதனை எமது page இல் comment செய்யுங்கள் (சூர்யா மெழுகுவர்த்திப் பெட்டியொன்று அருகில் தெரியும் விதமாக புகைப்படமெடுக்கவும்).
3. அதில் 5 நண்பர்களை Tag செய்யுங்கள்.
போட்டி முடிவுத் திகதி 30.12.2020


தெரிவு செய்யப்படும் 10 வெற்றியாளர்களுக்கு அவர்களது இல்லங்களுக்கே பரிசுப்பொதிகள் அனுப்பி வைக்கப்படும்.
சூர்யா மெழுகுவர்த்திகள் 2 அளவுகளில் கிடைக்கின்றன.
மேலதிக விபரங்களுக்கு 0773598440 என்ற இலக்கத்தை தொடர்புகொள்ளவும்.

# அரச எதிர்ப்புப் போராட்டங்களுக்கு உடன் ஏற்பாடுகளைச் செய்யுங்கள்!


## ஐ.தே.க. உறுப்பினர்களுக்கு ரணில் அதிரடி உத்தரவு

நாட்டு மக்கள் தொடர்பில் நாம் சிந்தித்திருந்த போதிலும் மக்கள் எம்மை கருத்தில் கொள்ளாது ஊடகங்களில் அரங்கேற்றப்பட்ட நாடகங்களுக்கும் நடிப்புகளிலும் ஏமாற்றமடைந்துள்ளனர். இருப்பினும் மக்களை கைவிட நாம் தயாரில்லை. ஜனவரியிலிருந்து கடும் அரச எதிர்ப்புப் போராட்டங்களை மக்களுக்காக ஐக்கிய தேசியக் கட்சி முன்னெடுக்கும். அதற்கான ஏற்பாடுகளை செய்யுங்கள்.

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, கட்சி உறுப்பினர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

ஐ.தே.க. தலைவர் தனது கொள்ளுப்பிட்டி இல்லத்தில் கட்சி உறுப்பினர்களை நேற்று சந்தித்து சமகால விடயங்கள் குறித்து கலந்துரையாடினார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இந்தக் கலந்துரையாடலில் சுகாதார அதிகாரிகளும் கலந்துகொண்டிருந்தமை விசேட அம்சமாகும்.

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் தொடர்பில் பாரிய பிரச்சினைகள் எழுந்துள்ளன. எரிப்பதா? புதைப்பதா? என்று ஆராய



பிரதமர் மீண்டும் குழு நியமித்துள்ளார்.

அதுவரையிலும் சடலங்கைளைப் பாரிய குளிரூட்டியில் வைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறான குளிரூட்டிகளில் வைரஸ் தொற்று அற்ற சடலங்களை வைப்பதும் பின்னர் வைரஸ் தொற்றால் உயிரிழந்த சடலங்களை வைப்பதும் என்பதும் பிரச்சினைக்குரிய விடயமாகும். ஏனெனில் வைரஸ் குளிரூட்டியில் நீண்டகாலம் உயிர் வாழும் என இந்தச் சந்திப்பில் வைத்திய அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

அதாவது கூடிய குளிரில் வைரஸ் மிக வேகமாகச் செயற்படும். எனவேதான் எந்தளவு தொற்று நீக்கம் செய்தாலும் குறித்த குளிரூட்டிகளில் வைரஸ்களை முழுமையாக அழிப்பதில் நெருக்கடி நிலை ஏற்படும். இவ்வாறானதொரு நிலையில் வைரஸ் தொற்றற்ற சடலத்தை வைக்கும்போது அதற்குள் கொரோனா வைரஸ் ஊடுருவி பெரும் அபாயம் ஏற்படும் எனவும் குறித்த வைத்திய அதிகாரி சுட்டிக்காட்டினார்.

வைரஸ் தொற்று பரவுதல், இதனால் ஏற்படும் உயிரிழப்பு மற்றும் அதன் பின்னரான அடக்கம் என இங்கு பல பிரச்சினைகள் உள்ளன. எனவே, அரசு உடனடியாக இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். அவ்வாறல்லாது கொரோனா சடலங்களை வைத்துக் கொண்டு அரசியல் விளையாடுவது முறையல்ல என்று இதன்போது ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

அவ்வாறு அரசியல் நோக்குடன் செயற்பட்டமையினாலேயே இன்று முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் தொடர்பான விவகாரம் மற்றுமொரு தொற்று நோயாகப் பரவியுள்ளது. எவ்வாறாயினும் நாம் மக்கள் தொடர்பில் சிந்தித்திருந்த போதிலும் மக்கள் எம்மைக் கருத்தில் கொள்ளவில்லை. ஊடகங்களில் முன்னெடுக்கப்பட்ட நாடகங்களுக்கும் நடிப்புகளுக்கும் ஏமாற்றமடைந்துள்ளனர். எனவேதான் வைரஸ் தொற்றில் மாத்திரமல்ல பொருளாதார ரீதியிலும் மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர் கொள்கின்றனர். மக்கள் எம்மை எவ்வாறு நடத்தினாலும் அந்த மக்களுக்காக முன்நிற்க வேண்டியது எமது கடமையாகும். மேடைகளில் மாத்திரமல்ல வீதிகளிலும் மக்களுக்காக அரச எதிர்ப்பு போராட்டங்களை முன்னெடுப்போம். ஜனவரியிலிருந்து கடும் அரச எதிர்ப்பு போராட்டங்களை முன்னெடுக்க தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்யுங்கள் எனவும் அவர் மேலும் கூறினார்.

# கொரோனாத் தொற்றைக் காரணம் காட்டி நாட்டு மக்களின் வயிற்றில் அடிக்கும் அரசு



## கடுமையாகச் சாடுகின்றது ஜே.வி.பி.

கொரோனாவைக் காரணம் காட்டி அரசு மக்களின் வாழ்வாதாரத்துடன் விளையாடுகின்றது. நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதில் அரசின் இயலாமை வெளிடப்பட்டுள்ள நிலையில் கேலிக்கூத்தான வர்த்தமானிகளை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றது.

- இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணி கடுமையாகக் சாடியுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமைகயத்தில் நேற்று நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இதன்போது உரையாற்றிய பிரசார செயலாளர் விஜித ஹேரத் எம்.பி. கூறுகையில்:-

மக்களால் தாங்கிக்கொள்ள முடியாதளவுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளன. கொரோனாத் தொற்று தீவிரமடைந்துள்ள நிலையில் மக்களின் வாழ்வாதாரம் படுமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

உதாரணமாக 2020 முதலாம் காலாண்டில் உள்நாட்டு விவசாய உற்பத்தி 5.6 வீதத்தால் வீழ்ச்சி கண்டிருந்தது. தொழிற்சாலைகள் துறை 7.8 வீதத்திலும், சேவை துறை 1.6 வீதத்திலும் வீழ்ச்சி கண்டது. மார்ச் மாதம் 19ஆம் திகதிக்குப் பின்னரே நாடு முடக்கப்பட்டது. எனவே, முதலாம் காலாண்டில் ஏற்பட்ட வீழ்ச்சிக்குக் கொரோனாவைக் காரணம் காட்ட முடியாது.

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதில் அரசின் இயலாமையே இதன் ஊடாக வெளிப்படுகின்றது. மக்களின் அத்தியாவசியப் பொருள்களின் விலை ஏற்றத்திற்கு எவ்வகையிலும் கொரோனா காரணம் இல்லை. தற்போதைய அரசு ஆட்சிப்பீடம் ஏறி மிகக் குறுகிய காலத்துக்குள் அத்தியாவசிய உணவுப்பொருள்களின் விலை மிக வேகமாக அதிகரித்துள்ளது.

உலக சந்தையில் எரிபொருள்களின் விலை மறைப்புள்ளியில் காணப்பட்ட போதிலும் அதன் பயனை மக்களுக்கு இந்த அரசு வழங்கவில்லை. மக்கள் எவ் வகையில் சீரழிந்தாலும் அரசு கருத்தில் கொள்ளப்போவதில்லை. கொரோனாவைக் காரணம் காட்டி பஸ் கட்டணம் அதிகரிக்கப்பட்டது.

பயணிகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கே இவ்வாறு கட்டணம் அதிகரிக்கப்படுகின்றது என்று கூறிய போதிலும் அனைத்து பஸ்களிலும் வழமைப்போல் பயணிகள் தொங்கிக் கொண்டே செல்கின்றனர். மக்களின் சுகாதாரப் பாதுகாப்பு எவ்வகையிலும் உறுதிப்படுத்தப்படவில்லை.

அரசால் அத்தியாவசிய பண்டங்களின் விலைகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. வரலாற்றில் முதல் தடவையாக தேங்காய்க்கு வர்த்தமானியை இந்த அரசு வெளியிட்டது. வர்த்தமானியின் விலை மட்டங்களுக்குத் தற்போது எங்குமே தேங்காய் கிடையாது. பொருளாதார மையங்கள் வர்த்தக அமைச்சரின் கீழ் இல்லை. - என்றார்.

## கொத்தமல்லி என்ற போர்வையில்; விவசாயக் கழிவுகள் இறக்குமதி!

கொத்தமல்லி என்ற போர்வையில் உக்ரைனில் இருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட விவசாயக் கழிவுகள் மீட்கப்பட்டுள்ளன.

இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட விவசாயக் கழிவுகள் அடங்கிய 28 கொள்கலன்கள் கொழும்பு ஒருகொடவத்தை பகுதியில் வைத்து மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




மஞ்சள் கன்றுகள் விற்பனைக்கு!

நல்ல தரமான இரண்டு அடி வரை வளர்ந்த ஒன்றரை மாத மஞ்சள் கன்றுகள் யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.

விலை - 150/=







கற்பகவனம் விற்பனை நிலையம்.
461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் முற்றம் - Yarl Muttam)
021 492 7778

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.12.2020 இல் வெளியிடப்பெற்றது.